**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 118/2021**
**நாள்.05.08.2026**
**பி.வா.சா.3- பிச்சைமுத்து**

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. யோகேஸ்வரி எனது மகள் ஆவார். எனது மனைவி சக்திமணி. நான் எரியோடு, ராமசாமி நகரில் குடியிருந்து வருகிறேன். எரியோடு, ராமசாமி நகரில் நான் குடியிருந்து வருகிறேன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் என் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

2. நான் நல்லமனார்கோட்டையில் குடியிருந்து வந்தேன் என்றால் சரியல்ல, தொழில் செய்து வந்தேன்.

3. என்னிடம் காட்டப்படும் வாக்காளர் பட்டியல் அடங்கிய ஆவணத்தில் உள்ள சம்பந்தப்பட்ட வார்டில் வரக்கூடிய வரிசை எண். 594, 595, 596ல் உள்ள முகவரியில் எனது தேர்தல் வாக்காளர் அடையாள அட்டை தற்போது இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்கண்ட **வாக்காளர் பட்டியல் வா.சா.ஆ.8 நகல் ஆக குறியீடு செய்யப்படுகிறது. (கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வா.சா.ஆ.8 ஆவணம் பொது ஆவணம் என்பதால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65ன் கீழ் குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவித்தார். மேற்கண்ட ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**

4. எனது குடும்ப அட்டையும் நல்லமனார்கோட்டையில் முகவரியில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது என் குடும்ப அட்டை தான் என்றால் சரிதான். **எனது குடும்ப அட்டை நகல் வா.சா.ஆ.9 ஆகு குறியீடு செய்யப்படுகிறது. (கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வா.சா.ஆ.9 ஆவணம் பொது ஆவணம் என்பதால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65ன் கீழ் குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவித்தார். மேற்கண்ட ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**

5. **என்னிடம் காட்டப்படும் எனது வாக்களார் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வா.சா.ஆ.10 ஆவணம் பொது ஆவணம் என்பதால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65ன் கீழ் குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவித்தார். மேற்கண்ட ஆட்சேபணையுடன் குறியீடு**

**செய்யப்படுகிறது)** மேற்கண்ட ஆவணத்தில் உள்ள முகவரியும், நல்லமனார் கோட்டையில் முகவரி என்றால் சரிதான்.

6. நான் எரியோடு, ராமசாமி நகரில் குடியிருந்து வரவில்லை என்பதால்தான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, வீட்டுவரி ரசீது உள்ளது. நான் எரியோடு ராமசாமி நகரில் குடியிருந்து வருகிறேன் என்றோ, அந்த முகவரியில் உள்ள இடத்திற்கு எனது பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றோ நிரூபண வாக்கமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. நான் நல்லமனார்கோட்டையில் இருந்து இந்த வழக்கு பற்றி தெரிந்து எப்படி வந்தேன் என்றால் நான் எரியோட்டில் குடியிருந்து வருவதாலும், வழக்கறிஞர் பெருமாள் வழக்கு பற்றி சொல்லியதாலும் நான் வந்தேன்.

8. நான் எரியோடு ராமசாமி நகரில் குடியிருந்து வரும் பிச்சைமுத்து இல்லை என்றாலும், பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி ஆள் மாறாட்டம் செய்து நீதிமன்றத்தில் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. 1ம் பிரதிவாதியை தெரியும். எரியோட்டில் மருத்துவ சங்கம் உள்ளதா என்றால் பதிவு செய்யப்படாத சங்கம் உள்ளது. அந்த சங்கத்தில் நான் உறுப்பினராக உள்ளேன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்யவில்லை. மேற்படி சங்கத்தில் நான் உண்மையில் உறுப்பினராக இல்லை என்பதால் தான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

10. எனக்கு முன்பு சாட்சியம் அளித்த கார்த்திக்கை எனக்கு தெரியும்.

11. முருகன் கோவில் பொது இடத்தில் பயன்பாட்டிற்காக கட்டப்பட்டுள்ளது என்று எனக்கு முன்பு சாட்சியம் அளித்த பி.வா.சா.2 சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். பொது இடத்தில் கட்டப்பட்டுள்ளது.

12. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 ஆவணத்தில் உள்ள முருகன் கோவில் தான் மேற்படி பொது இடத்தில் கட்டப்பட்டுள்ள கோவில் என்றால் சரிதான்.

13. தாவா சொத்து எனக்கோ, 1ம் பிரதிவாதிக்கோ, எரியோடு மருத்துவ சங்கத்திற்கோ பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

14. வாதி வீடு கட்டியுள்ள இடத்தின் மீது எனக்கோ, 1ம் பிரதிவாதிக்கோ, எரியோடு மருத்துவ சங்கத்திற்கோ சட்டப்படியான உரிமையோ, அனுபவமோ, பாத்தியம் எக்காலத்திலும் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அது பொதுஇடத்தில் கட்டப்பட்டுள்ளது.

15. வாதி வீடு கட்டி அனுபவித்து வரும் இடம் பொது இடம் என்பதற்கு எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

16. பி.வா.சா.1 தனது சாட்சியத்தில் எனக்கோ, நான் செயலாளராக பணியாற்றி வரும் மருத்துவர் சமூக சங்கத்திற்கோ வாதி அனுபவித்து வரும் வீட்டின் மீது எக்காலத்திலும் சட்டப்படியான உரிமையோ, பாத்தியமோ, அனுபவமோ இல்லை என்பதால் தான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான்.

17. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எங்கு வைத்து யாரால் தயார் செய்யப்பட்டது என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்பு வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு தயார் செய்யப்பட்டது.

18. 27.07.2026ம் தேதி எனது பெயரில் எந்த நிரூபண வாக்குமூலமும் தயார் செய்யவில்லை என்றாலும், அவ்வாறு தயார் செய்திருந்தால் அது பொய்யான வாக்குமூலம் என்றாலும் சரியல்ல.

19. மூன்று மாதத்திற்கு முன்பு தயார் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலம் தான் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வழக்கறிஞரிடம் நான் 4,5 கையெழுத்து போட்டுள்ளேன். எந்த கையெழுத்து போட்ட ஆவணத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3வது கையெழுத்து போட்ட ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன்.

20. வாதி ஈரோடு, ரயில் நகர், முத்துப்பாளையத்தில் குடியிருந்து வரவில்லை என்றாலும், 2008ம் ஆண்டு முதல் எரியோடு ராமசாமி நகரில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றாலும் சரியல்ல, வீடு கட்டவில்லை.

21. நானும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து வாதி வீடு கட்டி அனுபவித்து வருவதை தடையும், இடைஞ்சலும் செய்து வருவதோடு JCB இயந்திரம் கொண்டு இடித்து விடுவதாக மிரட்டியதாலும் வாதியின் வீட்டிற்கு முன்பு ஜல்லி, மணலை கொட்டி அனுபவிக்க விடாமல் இடைஞ்சல் செய்து வருவதாலும் நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல, வாதி வீடு கட்டவில்லை.

22. வாதி 2008ம் ஆண்டு முதல் வீடுகட்டி மின் இணைப்பு எண்.583 பெற்று அனுபவம் செய்து வருகின்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, வீடு இல்லை கொட்டம் கட்டியுள்ளனர், மின் இணைப்பு பெற்றுள்ளனர், அந்த கொட்டத்தை கூட என் அனுமதி பெற்றுதான் கட்டினார்.

23. வாதி அனுபவித்து வரும் வீட்டிற்கு நான் உரிமையாளரும் இல்லை, வாதி என்னிடம் அனுமதி பெறவில்லை, அனுமதி பெற்று கொட்டம் கட்டினார் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை, அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் பூமிராஜ் தான் கொஞ்ச காலம் சிமெண்ட், மரம் ஆகியவற்றை வீடு கட்டுவதற்காகவும் மேற்கண்ட பொருட்களை வைத்துக்கொள்ள வேண்டும் என்று கொட்டம் கட்ட என்னிடம் அனுமதி கேட்டார். வாதியோ, பூமிராஜோ கொட்டம் கட்ட அனுமதி கேட்டார் என்பதற்கு எழுத்துபூர்வமான ஆவணம் இல்லை என்றால் சரிதான், வாய்மொழியாக கேட்டார். வாய்மொழியாக கேட்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் மறுவிசாரணை**

1. நான் எனது மனைவியுடன் வசித்து வருகிறேன். எனது மனைவி பெயர் சக்திமணி. எனது மனைவி சக்திமணி பெயரில் தான் அரசாங்கம் வீட்டு மனை ஒதுக்கியது என்றால் சரிதான். அந்த வீட்டுமனையை எரியோடு ராமசாமி நகரில் ஒதுக்கினார்கள்.

2. என்னிடம் காட்டப்படும் **நத்தம் பட்டா எண்.1224 ஆனது எனது மனைவி சக்திமணி பெயரில் உள்ளது. அது பி.வா.சா.ஆ.7 (கணினி நகல்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3. எனது மனைவி பெயரில் உள்ள வீட்டுவரி ரசீது கணினி நகல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. அரசாங்கம் என் மனைவி பெயருக்கு ஒதுக்கிய பட்டா எண்.1224 ல் தான் தற்போது வரை குடியிருந்து வருகிறேன். **(மேற்படி ஆவணங்களில் பி.வா.சா.ஆ.7, பி.வா.சா.ஆ.8 ல் உள்ள சக்திமணி பி.வா.சா.3 ன் மனைவி இல்லை என்பதால் சக்திமணி பெயரில் வழங்கப்பட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய கற்றறிந்த வாதிதரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்தார். மேற்கண்ட ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)**

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

24. நான் எரியோடு ராமசாமி நகரில் குடியிருந்து வரவில்லை என்றாலும், எரியோடு ராமசாமி நகரில் குடியிருந்து வரும் பிச்சைமுதது மனைவி தான் சக்திமணி என்றாலும் பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி பி.வா.சா.ஆ.7, பி.வா.சா.ஆ.8 ஆவணங்களை வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

25. எரியோடு ராமசாமி நகரில் குடியிருந்து வரும் பிச்சைமுத்து நான் தான் என்றால் பி.வா.சா.ஆ.7, பி.வா.சா.ஆ.8 க்கான அசல் ஆவணங்கள் என்னிடம் இருக்கும், உண்மையில் மேற்படி முகவரியில் குடியிருந்துவரும் பிச்சைமுத்து நான் இல்லை என்பதால் தான் பி.வா.சா.ஆ.7, 8 க்கான அசல் ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**